# இராஜபாளையம் நகராட்சி

**12.02.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2047 ஹேவிளம்பி வருடம் தை மாதம் 30 ம் தேதி 2018ம் வருடம் பிப்ரவரி மாதம் 12 ம் தேதி திங்கள்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமி ராஜா நினைவுக் கூட்ட மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு இந்நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

வருகை– திருமதி.எஸ்.சசிகலா, எம்.எஸ்.சி., தனி அலுவலர்

1)இராஜபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 42 வார்டுகளின் எல்கை மறுவரையறை 2011–ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ள சென்னை வார்டு மறுவரையறை ஆணையம் அவர்களின் கடிதம் ந.க.எண் No.D1/2017/TNDC/EG1 நாள் 12.07.2017–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகராட்சிப் பகுதியில் உள்ள 42–வார்டுகளிலும் வார்டு எல்கை மக்கள் தொகை அடிப்படையில் மறுவரையறை செய்யப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண் 362 நாள் 13.12.2017–ன்படி அனுமதிக்கப்பட்டது. அதன்பின் உறுப்பினர் செயலர் வார்டு மறுவரையறை ஆணையம் கடிதம் ந.க.எண்3174/2017–ன்படி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து 08.02.2018 அன்று நடைபெற்ற கருத்துக் கேட்பு கூட்டத்தில் ஆணைய அலுவலர்களால் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சிக்கு வரப்பெற்ற வார்டு மறுவரையறை தொடர்பான ஆட்சேபனை மற்றும் கருத்துக்கள் தொடர்பான 21 விண்ணப்பங்கள் மீது பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு உள்ள இறுதி வார்டு மறுவரையறை கருத்துரு சென்னை வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( 4601/2017 எச் 2)

| வார்டு எண். | மொத்த மக்கள் தொகை | வார்டின் எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 3331 | நகராட்சி எல்கை | வார்டு எண். 2 , 4 | வார்டு எண். 6 | நகராட்சி எல்கை மற்றும் வார்டு எண். 8 |
| 2 | 3210 | நகராட்சி எல்கை | வார்டு எண். 3 | வார்டு எண். 4 | வார்டு எண். 1 |
| 3 | 3362 | நகராட்சி எல்கை | நகராட்சி எல்கை மற்றும் வார்டு எண். 19 | வார்டு எண். 5 | வார்டு எண். 2 , 4 |
| 4 | 2977 | வார்டு எண். 2 , 3 | வார்டு எண். 3 | வார்டு எண். 5 | வார்டு எண். 1 |
| 5 | 3026 | வார்டு எண். 3 , 4 | வார்டு எண். 17 | வார்டு எண். 16 | வார்டு எண். 1 , 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 2992 | வார்டு எண். 1 , 8 | வார்டு எண். 5 , 16 | வார்டு எண். 7 , 8 | வார்டு எண். 8 |
| 7 | 2964 | வார்டு எண். 6 | வார்டு எண். 16 | வார்டு எண். 13 , 14 | வார்டு எண். 8 |
| 8 | 2887 | நகராட்சி எல்கை | வார்டு எண். 6, 7, 13 | வார்டு எண். 9, 11 | வார்டு எண். 9 |
| 9 | 3116 | வார்டு எண். 8 | வார்டு எண். 8 | வார்டு எண். 11 | வார்டு எண். 10 |
| 10 | 2974 | நகராட்சி எல்கை | வார்டு எண். 9 | நகராட்சி எல்கை | நகராட்சி எல்கை |
| 11 | 2803 | வார்டு எண். 9 , 13 | வார்டு எண். 12 | கொண்டநேரி கண்மாய் | வார்டு எண். 10 |
| 12 | 2946 | வார்டு எண். 13 | வார்டு எண். 13 , 21 | வார்டு எண். 30 | வார்டு எண். 11 |
| 13 | 3082 | வார்டு எண். 7 | வார்டு எண். 14 , 15 | வார்டு எண். 12 | வார்டு எண். 8 , 12 |
| 14 | 2865 | வார்டு எண். 7 ,16 | வார்டு எண். 20 | வார்டு எண். 15 | வார்டு எண். 13 |
| 15 | 2765 | வார்டு எண். 14 | வார்டு எண். 20 | வார்டு எண். 13 | வார்டு எண். 13 , 14 |
| 16 | 3275 | வார்டு எண். 5 | வார்டு எண். 20 | வார்டு எண். 14 | வார்டு எண். 6 , 7 |
| 17 | 2933 | வார்டு எண். 3 | வார்டு எண். 18 | வார்டு எண். 20 | வார்டு எண். 5 |
| 18 | 3402 | வார்டு எண். 4 | நகராட்சி எல்கை | வார்டு எண். 19 | வார்டு எண். 3, 17 |
| 19 | 3409 | வார்டு எண். 18 | நகராட்சி எல்கை | வார்டு எண். 17 , 20 | வார்டு எண். 24 |
| 20 | 3089 | வார்டு எண். 17 | வார்டு எண். 19 , 24 | வார்டு எண். 21 | வார்டு எண். 15 , 16 |
| 21 | 3132 | வார்டு எண். 20 | வார்டு எண். 24 , 25 | வார்டு எண். 23 | வார்டு எண். 12 |
| 22 | 2977 | வார்டு எண். 21 | வார்டு எண். 23 , 27 | வார்டு எண். 29 | வார்டு எண். 30 |
| 23 | 3312 | வார்டு எண். 21 | வார்டு எண். 21, 26 | வார்டு எண். 27 | வார்டு எண். 22 |
| 24 | 3315 | வார்டு எண். 24 | நகராட்சி எல்கை | வார்டு எண். 25 | வார்டு எண். 20 |
| 25 | 2942 | வார்டு எண். 24 | நகராட்சி எல்கை | வார்டு எண். 39 | வார்டு எண். 21 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | 2852 | வார்டு எண். 21 | வார்டு எண். 25 , 39 | வார்டு எண். 38 | வார்டு எண். 21 , 27 |
| 27 | 2927 | வார்டு எண். 25 | வார்டு எண். 26 | வார்டு எண். 28 , 38 | வார்டு எண். 22 ,29 |
| 28 | 3098 | வார்டு எண். 27 | வார்டு எண். 38 | வார்டு எண். 38 | வார்டு எண். 29 |
| 29 | 2980 | வார்டு எண். 22 | வார்டு எண். 28 | வார்டு எண். 35 | வார்டு எண். 30 |
| 30 | 2887 | வார்டு எண். 12 | வார்டு எண். 24 ,29,31,32,35 | நகராட்சி எல்கை | நகராட்சி எல்கை |
| 31 | 3396 | வார்டு எண். 32 | வார்டு எண். 33 | நகராட்சி எல்கை | வார்டு எண். 30 |
| 32 | 3238 | வார்டு எண். 30 | வார்டு எண். 33 | வார்டு எண். 31 | வார்டு எண். 30 |
| 33 | 3433 | வார்டு எண். 34 | வார்டு எண். 36 | நகராட்சி எல்கை | வார்டு எண். 31 , 32 |
| 34 | 3216 | வார்டு எண். 35 | வார்டு எண். 36 | வார்டு எண். 33,36 | வார்டு எண். 30,33 |
| 35 | 3045 | வார்டு எண். 29 | வார்டு எண். 36 | வார்டு எண். 34 | வார்டு எண். 30 |
| 36 | 2896 | வார்டு எண். 33,34,29 | வார்டு எண். 37 | நகராட்சி எல்கை | வார்டு எண். 33,34 |
| 37 | 3343 | வார்டு எண். 38 | வார்டு எண். 40 | நகராட்சி எல்கை | வார்டு எண். 36 |
| 38 | 3325 | வார்டு எண். 26 | வார்டு எண். 39 | வார்டு எண். 37 | வார்டு எண். 28 , 29 |
| 39 | 2781 | வார்டு எண். 25 | நகராட்சி எல்கை | வார்டு எண். 40 | வார்டு எண். 26 , 38 |
| 40 | 3228 | வார்டு எண். 39 | வார்டு எண். 41 | நகராட்சி எல்கை | வார்டு எண். 37 |
| 41 | 3468 | நகராட்சி எல்கை | வார்டு எண். 42 | நகராட்சி எல்கை | வார்டு எண். 40 |
| 42 | 3244 | நகராட்சி எல்கை | நகராட்சி எல்கை | நகராட்சி எல்கை | வார்டு எண். 41 |

குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 410 அனுமதிக்கப்பட்டது**

2)இந்நகராட்சி பகுதியில் உள்ள 42 வார்டுகளிலும் 2017–2018ம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்கம் செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி விலைப் புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (சி2/4601/16)

| | | |
|---|---|---|
| 1 | திரு.ஜி.பத்மநாபன், 50/187 வணிகவைசியர் தெரு, இராஜபாளையம் | ஒரு பதிவிற்கு ரூ.2/– வீதம் |
| 2 | திரு.சதீஷ்பாபு, 87/150 பந்தபுரம் தெரு இராஜபாளையம் | ஒரு பதிவிற்கு ரூ.3/– வீதம் |
| 3 | திரு.பாலசங்கர், 285/415 முடங்கியார் ரோடு இராஜபாளையம் | ஒரு பதிவிற்கு ரூ.2.70/– வீதம் |

குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஜி.பத்மநாபன் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் செலவுத் தொகை ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**தீர்மானம் எண் 411 அனுமதிக்கப்பட்டது**

3)இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சியின் உரக்கிடங்கில் நிறுவப்பட்ட இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்க மேற்கூரையுடன் செட் போட ஒப்பந்த பணிக்கும் பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பயன்படுத்தப்படும் டம்பர், பிளேசர் பின் 36 எண்ணம் சப்ளை செய்யும் ஒப்பந்தப்புள்ளியை விளம்பரம் செய்ய மக்கள் தொடர்பு அலுவலர், விருதுநகர் அவர்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி அலுவலர் தினத்தந்தி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி நாளிதழ் 27.12.2017 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி நாளிதழ்க்கு விளம்பரம் கட்டணம் ரூ.5242/–(அனைத்து வரிகள் உள்பட) கோரி கடிதம் வரப்பட்டுள்ளது. மேற்படி கட்டணம் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2018)

குறிப்பு– 1)மேற்படி விளம்பரக் கட்டணம் தொகை செலுத்த அனுமதிக்கலாம். 2)செலவுத் தொகையை பொதுநிதியில் இருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண் 412 அனுமதிக்கப்பட்டது**

4) இராஜபாளையம் நகராட்சி குடிநீர் லாரி எண் டிஎன் 67 இசட் 2642 வாகனம் தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டு வாகனத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பணிகள் செய்யும் போது கூடுதலாக வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டு தற்போது இயக்க நிலையில் உள்ளது. அதற்கான செலவினம் ரூ.11200/– மட்டும் மதிப்பீட்டுத் தொகை ரூ.52000/– சேர்த்து கூடுதல் செலவினத் தொகை ரூ.63200/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/3637/17)

குறிப்பு– அனுமதிக்கலாம். மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண் 413 அனுமதிக்கப்பட்டது**

5) இராஜபாளையம் நகராட்சி வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள vehicle tracking device GPS சாதனம் புதுப்பிக்க ஆகும் ஆயுள் சந்தா கட்டணம் ஒரு கருவிக்கு ரூ.3000/– வீதம் 16 கருவிக்கு GST கட்டணம் உட்பட ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.57000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/10685/16)

குறிப்பு– அ) அனுமதிக்கலாம். ஆ)மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். இ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 414 அனுமதிக்கப்பட்டது**

6) இராஜபாளையம் நகராட்சி பகுதியில் பயன்படுத்தப்பட்டு வரும் ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள சின்டெக்ஸ் தொட்டிகளின் மேல்மூடி இல்லாமல் இருப்பதால் மேல் மூடி அமைக்கும் பணிக்கு 10.1.18 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/47/17)

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.பாஸ்கரன் | ரூ.153/– (1 மூடியின் விலை GST உட்பட) |
| 2 | திரு.கே.பாலமுருகன் | ரூ.160/–(1 மூடியின் விலை GST உட்பட) |
| 3 | திரு.எஸ்.வி.சத்தியநாராயணன் | ரூ.146/–(1 மூடியின் விலை GST உட்பட) |

குறிப்பு–அனுமதிக்கலாம். வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.வி.சத்தியநாராயணன் ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மானம் எண் 415 அனுமதிக்கப்பட்டது**

7)இராஜபாளையம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண் 18 கதவு எண் 289 வரிவிதிப்பு எண் 26038 சொத்தானது மீனாட்சி என்ற பெயரிலிருந்து திரு.கார்த்திகேயன் என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததினை எதிர்த்து ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.எண்.272/2017ல் வழக்கு தொடரப்பட்டுள்ளனர். மேற்படி வழக்கினை எதிர்த்து இந்நகர்மன்ற வழக்கறிஞர் எதிர்த்து வழக்காட ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (அ2/4850/17)

குறிப்பு– அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 416 அனுமதிக்கப்பட்டது**

8) இராஜபாளையம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண் 11 கதவு எண் 827, 828, 828/1, 828/2 828/3க்கு புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்டதை எதிர்த்து திரு.கே.கே.நாராயணராஜா, திரு.கே.என்.செல்வராஜ், என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர் சப்கோர்ட்டில் C.M.A. 11/2017 வழக்கு தொடுத்துள்ளனர். மேற்படி வழக்கினை எதிர்த்து வழக்காட இந்நகர்மன்ற வழக்கறிஞருக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (அ2/10091/16)

குறிப்பு– அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 417 அனுமதிக்கப்பட்டது**

9) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள டிஎன் 67 சி 9423 ஜேசிபி வாகனத்தின் 2018ம் ஆண்டிற்கு வருடாந்திர சான்று பெறும் பொருட்டு கீழ்க்கண்ட பழுதுப் பணிகள் பார்க்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.78000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/423/18)

1)பிரண்டு சீல் இரண்டு பக்கமும் புன் மின்கள் மாற்றி வெல்டிங் வேலை மற்றும் லேத் வேலை சென்டர் பின்புஸ்கள் மற்றும் பேரிங் மாற்றுதல்.
2) ஹைட்ராலிக் பம்பு சர்வீஸ் செய்து எம்ஆர்வி பிரகள் சரி செய்தல்
3)டாப் மற்றும் எல்.எஸ். கண்ணாடி புஸ்கள் மாற்றுதல்
4)டீசல் பில்டர் ஆயில் பில்டர் மாற்றி ஆயில் சர்வீஸ் செய்தல்
5)வாட்டர் சர்வீஸ் மற்றும் கிரிஸ் பேக்கிங் செய்தல்
6)பெயிண்டிங் அடித்து எழுத்து எழுதுதல்
குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண் 418 அனுமதிக்கப்பட்டது**

10) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள டிஎன் 67 எ.இசட் 9290 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு புதிய டயர்கள் சப்ளை செய்ய கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/5066/17)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | மீனா டயர்ஸ், 6,6எ ரயில்வே பீடர் ரோடு இராஜபாளையம் | ரூ.66100/– |
| 2 | நவீன் டயர்ஸ், 147சி2, டிபி மில்ஸ் ரோடு இராஜபாளையம் | ரூ.68200/– |

குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம். குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மீனா டயர்ஸ் நிறுவனத்தாரருக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் செலவுத் தொகைக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 307 நாள் 1.11.17ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.
**தீர்மானம் எண் 419 அனுமதிக்கப்பட்டது**

11) இந்நகராட்சி பொது சுகாதாரப் பணியினை மேம்படுத்தும் வகைக்கும் வணிக நிறுவனப் பகுதியில் சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக சேகரம் செய்யும் பொருட்டு Twin bins (இரட்டை குப்பைக்கூடை) நகராட்சி வணிகப் பகுதிகளில் ஆங்காங்கு வைத்து சுகாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு Twin bins தனியார் நிறுவனத்திலிருந்து வாங்கும் பொருட்டு உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/6722/17)
குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி Twin bins தனியார் நிறுவனத்திலிருந்து வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண் 420 அனுமதிக்கப்பட்டது**

12) இந்நகராட்சி பொது சுகாதாரப் பணிகளை மேம்படுத்தும் வகைக்கும் அதிக குப்பை சேகரமாகும் வணிக நிறுவனங்களுக்கும் உலர் குப்பைகளை (Net waste) உரமாக்கும் My green Bin அதாவது சமையலரை கழிவுகளை மக்கி உரமாக்கும் தொட்டி ஒரு எண்ணம் வாங்கி Bulk generators க்கு விளக்கம் ( Demo) அளித்து பயன்படுத்தும் வகைக்கு ம் My green Bin ஒரு எண்ணம் தனியார் நிறுவனத்திலிருந்து வாங்கி வழங்கும் பொருட்டு உத்தேச செலவுத் தொகை ரூ.7000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/6721/17)
குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம். தனியார் நிறுவனத்திலிருந்து வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 421 அனுமதிக்கப்பட்டது**

13) இந்நகராட்சியில் பாதாளசாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அலுவலகம் மூலம் நடைபெற உள்ளது. மேற்படி திட்டத்திற்கு கீழ்க்கண்ட சர்வே எண்கள் உள்ள இடம் தேவை என மேற்படி அலுவலக கடிதம் எண்.8917–3/எப் இராஜபாளையம் /UGSS/JD02/2018 நாள்.08.02.2018 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அலுவலகம் கோரிய சர்வே எண்கள் உள்ள இடம் மற்றும் Land mark உள்ள இடத்தை ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl .N o, | Zo ne | Details of Pumping Station | | Component s | Extend of land required | Reven ue land Surve y no /T.S.n o | Ownersh ip of land | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | Lift station 1 | Alagainagar northside near Public Toilet under construction | Lift well and Kiosk | 5 m X 5 m | | Municipal land | Existing damaged water tank to be demolished and to be utilized for the lift station |
| 2 | | Lift station 2 | Samanthapuram seethakathi street in kurinchinagar | Lift well Kiosk | 5 m X 5 m | | Municipal land | |
| 3 | | Lift station 3 | In the street near Masonry water tank in Santhoorani – (Eastern side of toilet) | Lift well Kiosk | 5 m X 5 m | | Municipal land | Existing unused sintex tank, kiosk to be demolished and to be utilized for the lift station |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | Master Pumping station | Vadakku Avarampatti | Screen well, Grit well, Suction well and pump room | 51m X 43 m | Block no 18, TS no 103 | HR & CE | Block no 18, TS no 103 |
| 5 | 2 | Lift station 1 | Southern side of Thiruvananthapuram street | Lift well Pump room | 10 m X 5 m | | Municipal land | |
| 6 | | Sub Pumping station - Zone 2 | Indira Nagar near Burial Ground | Screen well, Grit well, Suction well and pump room | 51m X 32 m | Block no 17, TS no 3 | Municipal land | |
| 7 | 3 | Sub Pumping station - Zone 3 | Vadakku Andalpuram | Screen well, Grit well, Suction well and pump room | 55m X 16 m | Block no 8, TS no 240 | Highways land | Block no 8, TS no 240 |
| 8 | | STP | Municipal compost yard | | 150m X150m | | Municipal land | |

அலுவலக குறிப்பு– 1) பாதாள சாக்கடை திட்டத்தின் செயலாக்கத்தின் போது மேற்கண்ட திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரிசை எண்கள் 4 மற்றும் 7ல் குறிப்பிட்டுள்ள இடங்கள் இந்து அறநிலையத் துறை மற்றும் நெடுஞ்சாலை துறைகளுக்கு சொந்தமானது என்பதால் மேற்படி துறைகளிடமிருந்து இவ்விடத்தை உரிய முறையில் பெற்று ஒப்படைக்கவும் மன்ற அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 422 அனுமதிக்கப்பட்டது**

14) இராஜபாளையம் நகராட்சி உரக்கிடங்கில் நாளொன்றுக்கு 100 மெ.டன் டன் திடக்கழிவுகளை செயலாக்கம் செய்ய இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள இவ்வலுவலக வேலை உத்தரவு ந.க.எண்.1496/2017/இ1 நாள் 12.7.17ன்படி மெச்சர்ஸ் நிவே இன்ஜினியரிங் எம்.எஸ்.டபிள்யு பிரைவேட் லிமிடெட் சென்னை நிறுவனத்திற்கு உத்திரவிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனம் 24.6.17 அன்று செய்து கொண்ட ஒப்பந்த உடன்படிக்கை chapter for clause ITT 15 படி 21 நாள்களுக்குள் பணியை துவக்கி இருக்க வேண்டும். ஆனால் மேற்படி நிறுவனம் பணியை துவக்க முன் வராததால் இவ்வலுவலக 22.9.17 அறிவிப்பின் வாயிலாகவும் 21.12.17, 02.02.18 ம் நாளிட்ட காரண கேட்பு அறிவிப்புகள் (Show cause Notice) வாயிலாகவும் பணியினை உடன் துவக்க வேண்டும். அல்லது தவறும் பட்சத்தில் ஏன் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யக் கூடாது என்பதற்கான முகாந்திரத்தை எழுத்து மூலமாக சமர்ப்பிக்க ஒப்பந்த நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் அறிவிப்பில் வழங்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணியை துவக்கப்படவும் இல்லை. உரிய முகாந்திரத்தை சமர்ப்பிக்கவும் இல்லை. எனவே திடக்கழிவு மேலாண்மை பணிகள் கையாளுதலின் முக்கியத்துவம் கருதி அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக ஒப்பந்த

உடன்படிக்கையை மீறிய நிறுவனத்திற்கு விளக்கமளிக்க போதிய முகாந்திரம் ஏதும் இல்லை என்ற முடிவுடன் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் முன் வைப்புத் தொகையையும் முடக்கி நிறுவனத்தின் பெயரை கருப்புப் பட்டியலிட்டு அரசுக்கு அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2017)
குறிப்பு– அனுமதிக்கலாம். ஒப்பந்தத்தை ரத்து செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 423 அனுமதிக்கப்பட்டது**

15) இராஜபாளையம் நகராட்சி ஆணையாளர் குடியிருப்பில் மின் சப்ளை தடை நேரங்களில் பயன்படுத்த 100 AH 12 V.UPS பேட்டரி 2 எண்ணம் சப்ளை செய்யும் பணிக்கு 17.1.18 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் (இ2/61/17)

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | எம்/எஸ்.விவேகா எலக்ட்ரானிக்ஸ் (ம) பவர் சிஸ்டம்ஸ் , 206ஈ பிரசிஆர் ரோடு இராஜபாளையம் | ரூ.22900/– |
| 2 | எம்/எஸ்.விஷ்வின் பேட்டரி சேல்ஸ் (ம) சர்வீஸ், 59 பூபதி பேங்க் தெரு, இராஜபாளையம் | ரூ.21600/– |

குறிப்பு–அனுமதிக்கலாம். வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விகிதம் ரூ.21600/– கொடுத்துள்ள எம்/எஸ்.விஷ்வின் பேட்டரி சேல்ஸ் (ம) சர்வீஸ், நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
**தீர்மானம் எண் 424 அனுமதிக்கப்பட்டது**

16) இந்நகராட்சியின் மாடசாமி கோவில் ரோடு தண்ணீர் தொட்டி மேற்கு பக்கம் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.20,000/– க்கு 2.2.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு (இ1/930(1)/18)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை | மதிப்பீடு தொகை விவரம் |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.பாலசாஸ்தா | 20000/– | மதிப்பீடு தொகையை விட 2.51% அதிகம் |
| 2 | திரு.கே.தங்கம் | | மதிப்பீடு தொகையை விட 0.10% குறைவு |

குறிப்பு– வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10% குறைவாக கொடுத்துள்ள திரு.கே.தங்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
**தீர்மானம் எண் 425 அனுமதிக்கப்பட்டது**

17)இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் அனைத்து பிரிவுகள் அலுவலக முன்புறம் பின்புறம் மற்றும் பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளை கண்காணிக்கும் பொருட்டு C.C.T.V கேமிராக்கள் பொருத்தும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.3.25லட்சத்திற்கு மட்டும் மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/7011/15)
குறிப்பு– அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண் 426 அனுமதிக்கப்பட்டது**

18) இந்நகராட்சியின் மாடசாமி கோவில் ரோடு தண்ணீர் தொட்டி மேற்கு பக்கம் உள்ள அங்கன்வாடி மையத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மதிப்பீடு தொகை ரூ.42,000/–க்கு 2.2.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு (இ1/930/18)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை விவரம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.பாலசாஸ்தா | மதிப்பீடு தொகையை விட 2.67% அதிகம் |
| 2 | திரு.கே.தங்கம் | மதிப்பீடு தொகையை விட 0.10% குறைவு |

குறிப்பு– வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10% குறைவாக கொடுத்துள்ள திரு.கே.தங்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 427 அனுமதிக்கப்பட்டது**

19) இந்நகராட்சிக்கு NULM DEENDYAL ANTOYDAYA YOJANA 2017–2018ன் கீழ் SHELTER FOR URBAN HOUSELESS அமைக்க 4வது திட்டக்குழு கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை நாள் 26.12.2017ல் ஒரு சிறப்பு தங்குமிடம் ரூ.42.50லட்சம் (நாற்பத்தி இரண்டு லட்சம்)மட்டும் அதற்கான ஆண்டு இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொகை ரூ.5.76 லட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட மதுரை தென்காசி சாலையில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் உரிய நிதி வடிவமைப்பில் ரூ.42.50லட்சத்திற்கு கட்டவும் உரிய நிர்வாக அனுமதியும் அதற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினம் ரூ.5.76 லட்சம் மட்டும் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/1117/2018)

குறிப்பு– அனுமதிக்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 428 அனுமதிக்கப்பட்டது**

20) இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2015–2016ம் ஆண்டின் கீழ் உரக்கிடங்கில் கூரை வள மீட்பு மையம் இலகு ரகு மேற்கூரையுடன் கட்ட அதற்கான கட்டுமான வடிவமைப்பு (Structured design) செய்வதற்கான ஆலோசனை மற்றும் சேவை மேற்கொள்ளப்பட்டு உரிய வடிவமைப்பு (Design ) அண்ணா பல்கலைக் கழகம் மண்டல வளாகம் அமைப்பின் துறையில் இருந்து பெறப்பட்டு உள்ளது. எனவே மேற்படி ஆலோசனை மற்றும் சேவை வழங்கியமைக்கு அண்ணா பல்கலைக் கழகம் மண்டல அலுவலகம் திருநெல்வேலிக்கு கட்டணமாக ரூ.70800/– மட்டும் வழங்க கோரி மேற்படி பல்கலைக் கழகம் 12.7.2017 அன்று கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் மேற்படி கட்டணத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/8865/15)

குறிப்பு– அண்ணா பல்கலைக் கழகம் மண்டல வளாகம் திருநெல்வேலிக்கு கட்டணத் தொகை ரூ.70800/–மட்டும் வழங்கலாம்.

**தீர்மானம் எண் 429 அனுமதிக்கப்பட்டது**

**21)** இந்நகர் தென்காசி ரோட்டில் அமைந்துள்ள பி.எஸ்.குமாரசாமிராஜா பூங்கா நுழைவு வாயில் முன்பு கழிவு நீர் தேங்கியும் பாலம் பழுந்தடைந்து கழிவு நீர் செல்ல வழியில்லாமல் உள்ளது. எனவே மேற்படி இடத்தில் பூங்கா உள்புறம் தளத்திற்கு ஏற்ற வகையில் கழிவு நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.2.20லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2018)

குறிப்பு– நிர்வாக அனுமதியும் மேற்படி மதிப்பீடு தொகை ரூ.2.20லட்சம் மட்டும் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 430 அனுமதிக்கப்பட்டது**

**22)** இந்நகராட்சி 39வது வார்டு சங்கரன் கோவில் ரோடு எம்.ஆர். நகர் பகுதி முதல் குறுக்கு தெருவில் கழிவு நீர் கால்வாயில் தரை பழுதடைந்து கழிவு நீர் செல்ல வசதி இல்லாமல் தேங்கி உள்ளது. மேற்படி வடிகால் கழிவு நீர் செல்ல ஏதுவாக தளத்தை சீராக அமைத்து பழுது நீக்கம் செய்யவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.35,000/–மட்டும் நிர்வாக அனுமதி வேண்டியும், மேற்படி பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எம்.பாலசாஸ்தா என்பவர் வசம் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2018)

குறிப்பு– அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை செய்வதற்கும் மேற்படி தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 431 அனுமதிக்கப்பட்டது**

ஒம்/எஸ்.சசிகலா
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
இராஜபாளையம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
இராஜபாளையம் நகராட்சி